**<u>மோட்டார் விபத்து கோருரிமை தீர்ப்பாயம், (சார்பு நீதிமன்றம்) செஞ்சி</u>**

**எம்.சி.ஓ.பி.எண். 340/2018 நாள்.19.09.2024**

2024-ம் ஆண்டு செப்டம்பர் திங்கள் 19-ம் நாள் மனுதாரர் தரப்பு 1ம் சாட்சியின் வாக்குமூலம் 1969ம் ஆண்டு உறுதிமொழி சட்டப்படி சாட்சியிடம் சத்தியபிரமாணம் செய்யப்பட்டு பதிவு செய்யப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | வெங்கடாஜலம் | தொழில் | |
| த.பெ/க.பெ. | கன்னிக்கவுண்டர் | சாதி | |
| கிராமம் | செஞ்சி | மதம் | இந்து |
| வட்டம் | | வயது | 67 |

**<u>ம.சா.1</u>**

**<u>குறுக்கு விசாரணை</u>**

விபத்து நடந்த இடம் திருவண்ணாமலை அண்ணா ஆர்ச் ஆகும். பேருந்து நிலையத்திற்கு உள்ளே செல்லகூடிய இடம். விபத்தில் இறந்துபோன எனது மகன் East wind foodwear company ltd என்ற கம்பெனியில் வேலை செய்து மாத சம்பளம் மொத்த ஊதியம் ரூ.12456.45/- நிகர ஊதியம் ரூ.10258.45/- ம.சா.ஆ-5ல் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். திருவண்ணாமலை கிழக்கு காவல்நிலையத்தில் நான்தான் புகார் அளித்தேன். திருவண்ணாமலையில் கிரிவலம் சுற்றி வந்தபோது தான் அந்த விபத்து நடைபெற்றது என புகாரில் குறிப்பிட்டுள்ளீர்கள் என்றால் சரிதான். விபத்து நடந்த அன்று மக்கள் கூட்டம் அதிகமாக இருந்தது என்றால் சரிதான். உங்கள் விபத்திற்கு காரணம் விபத்தில் இறந்துபோன உங்கள் மகன் தான் காரணம் என்றாலும், பேருந்து ஓட்டுநர் அஜாக்ரதை காரணம் இல்லை என்றாலும் சரியல்ல. விபத்து பேருந்து ஓட்டுநரின் அஜாக்ரதை மற்றும் கவனகுறைவால் தான் ஏற்பட்டது. உங்கள் மகன் சாலையில் திடீரென குறுக்கே வந்ததால் ஏற்பட்டது என்றால் சரியல்ல. அவர் ஓரமாக தான் நின்றுகொண்டிருந்தார்.

(என்னுடைய நிரூபண வாக்குமூலத்தையும் ஆவணங்களையும் ஏற்று மனுப்படி தீர்ப்பளிக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்).